சின்னமனூர் நகராட்சி
சின்னமனூர்.
நாள்:– 28.02.2020

## <u>சாதாரணக் கூட்டம்</u>

திருவள்ளுவர் ஆண்டு, விகாரி வருடம் மாசி மாதம் 16–ஆம் நாள் (பிப்ரவரி திங்கள் 28–ஆம் நாள்:– 28.02.2020) வெள்ளிக் கிழமையன்று பிற்பகல் 03.00 மணியளவில் சின்னமனூர் நகராட்சி தனி அதிகாரி அவர்களின் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் விபரம்.

தனி அதிகாரி மற்றும் ஆணையாளர்
சின்னமனூர் நகராட்சி.

**பொருள் எண்.1**

இந்நகராட்சியில் 2019–2020–ஆம் நிதியாண்டில் 14வது மத்திய நிதிக்குழு திட்டத்தின் கீழ் சாலை பணிகள் மேற்கொள்ள தினசரி நாளிதழ்களில் 10.01.2020–ஆம் அன்று ஒப்பந்தப்புள்ளி கோரி அறிவிப்பு செய்தமைக்கு 1.M/s The Daily Thanthi, Dindigul அவர்களுக்கு தொகை ரூ.9878/– மற்றும் 2.M/s.Bright Advertisement, Chennai அவர்களுக்கு தொகை ரூ.11030/– வழங்க மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–**
1. **மன்றம் அனுமதிக்கலாம்.**
2. **மேற்காணும் செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ளலாம் (ந.க.எண்.0043/2020/இ1).**

**தீர்மான எண், நாள்** **817, நாள்.28.02.2020**

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

**பொருள் எண்.2**

தமிழக அரசு மற்றும் மாவட்ட சுகாதார பணிகள், இணை இயக்குநர், தேனி மற்றும் மாவட்ட பூச்சியியல் வல்லுநர், தேனி அவர்களின் 05.02.2020 ஆம் தேதிய அறிவுரைப்படி, சின்னமனூர் நகராட்சி பகுதிகளில் உள்ள அனைத்து அரசு மருத்துவமனைகள், தனியார் மருத்துவமனைகள், கிளினிக், அரசு அலுவலகக் கட்டிடங்கள், திருமண மண்டபங்கள், திரையரங்குகள், உழவர் சந்தை, வாரச்சந்தை மற்றும் பொது மக்கள் அதிகமாகக் கூடும் இடங்கள், வழிபாட்டுத் தலங்கள் ஆகிய பகுதிகளில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக (Lysol) லைசால் என்ற கிருமிநாசினியை அதிகாரப் பூர்வமாக அறிவுறுத்தப்பட்ட அளவான (1) ஒரு லிட்டர் லைசாலுடன் 9 லிட்டர் தண்ணீரை கலந்து மருத்துவமனை கிளினிக், ஆம்புலன்ஸ் போன்றவற்றிற்கும், (2) 1 லிட்டர் லைசாலுடன் 19 லிட்டர் தண்ணீரை கலந்து பேருந்து நிலையம், அனைத்து வாகனங்கள், பொது மக்கள் கூடுமிடங்கள் போன்றவற்றிற்கும், (3) 1 லிட்டர் லைசாலுடன் 49 லிட்டர் தண்ணீர் கலந்து குடியிருப்பு பகுதிகளிலும் தெளிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே, அனைத்து மருத்துவமனைகளுக்கும் அறிவிப்பு வழங்குவதற்கும் மருத்துவமனை தவிர்த்து மற்ற பகுதிகளில் லைசால் தெளிக்க வேண்டியுள்ளதாலும், பொது மக்கள் நலன் கருதியும் அவசரம் அவசியம் மற்றும் நிர்வாக நலன் கருதி தேவையான அளவு லைசால் வாங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.200000/–க்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–**
1. **மன்றம் அனுமதிக்கலாம்.**
2. **பொது சுகாதாரப் பணி மற்றும் பொது மக்களின் நலன் கருதி மற்றும் அவசர அவசியமாக லைசாலை உள்ளூர் விலைப்புள்ளி பெற்று வாங்கும் நடைமுறையை மன்றம் ஏற்கலாம்.**

**தீர்மான எண், நாள்** **818, நாள்.28.02.2020**

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

**பொருள் எண்.3**

இந்நகராட்சியின் எல்லைக்குட்பட்ட வார்டு எண்.27, அழகர்சாமி நகர் பகுதியில் குடிநீர் பகிர்மானக் குழாய் அமைப்பதற்கு (குடிநீர் குழாய் இணைப்பு வழங்குவதற்கு) உத்தேச மதிப்பீடு தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலகக் குறிப்பு:– | 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்காணும் செலவினத்தை குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் மேற்கொள்ளலாம். (ந.க.எண்.0486/2020/இ2) |
| தீர்மான எண், நாள் | 819, நாள்.28.02.2020 |
| தீர்மானம் | அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண்.4**

இந்நகராட்சிக்குச் சொந்தமான 2020–2023–ஆம் ஆண்டு குத்தகை இனமான சங்கிலியார் திடலில் உள்ள கட்டண கழிப்பறையில் கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டு காலத்திற்கு 11.02.2020ம் அன்று நடைபெற்ற பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் முன் வைப்புத் தொகை செலுத்தி ஏலம் கோர ஒருவரும் முன்வரவில்லை.

மேற்கண்ட இனத்திற்கு கீழ்க்காணும் விவரப்படி முன்வைப்புத் தொகை செலுத்தி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் வரப்பெற்றுள்ளன. மேற்படி ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்தப்புள்ளிதாரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி ஆண்டுக் கேள்வி ரூபாய் |
|---|---|---|
| 1. | பி.முத்துவீரன், த/பெ.பிச்சை வார்டு எண்.27, அய்யனார்புரம், சின்னமனூர் | 3,66,000/– |
| 2. | மு.குப்பமுத்து, த/பெ.முத்து இருளாண்டி, வார்டு எண்.26, வெள்ளையன் தெரு, கே.கே.குளம், சின்னமனூர் | 3,33,333/– |

| | |
|---|---|
| அலுவலகக் குறிப்பு:– | மேற்படி ஏல இனத்திற்கு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் வரப்பெற்றுள்ளது. இதில் வரிசை எண்.1இன்படி, பி.முத்துவீரன், த/பெ.பிச்சை என்பவர் கோரியுள்ள உயர்ந்த பட்ச தொகை ரூபாய்.366000/– கடந்த மூன்றாண்டு சராசரியைக் காட்டிலும் ரூ.18170/– (331004– 347554–364931) கூடுதலாகவும் கடந்த ஆண்டு உரிமத் தொகையைக் காட்டிலும் ரூ.1069/– கூடுதலாகவும் உள்ளதால் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.5431/2017/அ2). |
| தீர்மான எண், நாள் | 820, நாள்.28.02.2020 |
| தீர்மானம் | அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண்.5**

சின்னமனூர் நகராட்சியில் செயல்பட்டு வரும் நுண்ணுயிர் கூடத்தில் (Micro Compost Centre) தூர்நாற்றம் வீசுவதை தவிர்க்கும் பொருட்டு தேவையான லெமன் கிராஸ் ஆயில் விநியோகிக்கும் பணிக்கு நகர்மன்ற தீர்மானம் எண்.810, நாள்.04.02.2020 அன்று ரூ.6,00,000/–க்கு நிர்வாக அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 19.02.2020ம் அன்று வரப்பெற்ற கீழ்க்கண்ட விவரப்படியான ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | Sri Balaji Marketing, Export & Distributors, Dindigul | 1 Litre – Rs.2990/– (GST 18% நீங்கலாக) |
| 2. | Sri Vinayaga Pharma (Pharma and Siddha Distributor) Pollachi | 1 Litre – Rs.3100/– (GST 18% நீங்கலாக) |

அலுவலகக் குறிப்பு:–

1. **குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்த Sri Balaji Marketing, Dindigul என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.**
2. **பொது சுகாதார பிரிவின் அவசர அவசியம் கருதி மேற்கண்ட பணிக்கு முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.0458/2020/எச்1)**

**தீர்மான எண், நாள்** **821, நாள்.28.02.2020**

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

**பொருள் எண்.6**

சின்னமனூர் நகராட்சி பொது சுகாதார பிரிவிற்கு தேவையான நிலவேம்பு கசாயம் விநியோகிக்கும் பணிக்கு இந்நகர்மன்ற தீர்மானம் எண்.799, நாள்.06.01.2020ம் அன்று ரூ.600000/–க்கு நிர்வாக அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 19.02.2020 ஆம் தேதியன்று கீழ்க்கண்ட விவரப்படியான ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது மன்றத்தின் அனுமதிக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | Sri Balaji Marketing, Export & Distributors, Dindigul | 1 Litre – Rs.1900/– (GST 5% நீங்கலாக) |
| 2. | Sri Vinayaga Pharmacy (Pharma and Siddha Distributor) Pollachi | 1 Litre – Rs.2100/– (GST 5% நீங்கலாக) |

அலுவலகக் குறிப்பு:–

1. **குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்த Sri Balaji Marketing, Dindigul என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.**
2. **மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.0094/2020/எச்1)**

**தீர்மான எண், நாள்** **822, நாள்.28.02.2020**

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

## பொருள் எண்.7

இந்நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் 15.02.2020–ஆம் தேதிய ந.க.30322/2012/இ3 எண்ணிட்ட கடிதத்தின்படி நகரியல் கட்டிட சொசைட்டி (Urban Administrative Building Society) கட்டிட கட்டுமான பணிக்கு நான்காம் தவணைத் தொகையாக (இரண்டாம் நிலை நகராட்சியிலிருந்து) ரூ.163638/–க்கு மட்டும் (ரூபாய் ஒரு இலட்சத்து அறுபத்தி மூன்றாயிரத்து அறநூற்றி முப்பத்தி எட்டு மட்டும்) செலுத்த மன்ற அனுமதி வேண்ப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | **மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.0682/2020/சி1)** |
| **தீர்மான எண், நாள்** | **823, நாள்.28.02.2020** |
| **தீர்மானம்** | **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |

*******

## பொருள் எண்.8

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் TN60Z2921 என்ற டிராக்டர் வாகனத்திற்கு 2020–2021ம் ஆண்டிற்கான இன்சூரன்ஸ் பிரிமியத் தொகை ரூ.10900/–ஐ தேனி யுனைடேட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் நிறுவனத்திற்கு செலுத்த பட்டியல் வரப்பெற்றுள்ளதை தொடர்ந்து மேற்படி தொகையினை செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | **1.மன்றம் அனுமதிக்கலாம்.**<br>**2. மேற்கண்ட செலவினத் தொகையினை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் தீர்மானிக்கலாம். (ந.க.எண்.0308/2018/எச்1)** |
| **தீர்மான எண், நாள்** | **824, நாள்.28.02.2020** |
| **தீர்மானம்** | **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |

*******

**பொருள் எண்.9**

சின்னமனூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பைகளை வீடு வீடாக சென்று பிரித்து வாங்குதல், தெரு கூட்டுதல், வடிகால் சுத்தம் செய்தல், சுத்தம் செய்த சாக்கடை மண்ணை அகற்றுதல், சாலையோர மண்களை அகற்றுதல், மழைநீர் வடிகால் மண் அகற்றுதல், சேகரிக்கப்பட்ட குப்பை சாக்கடை மண் கழிவுப் பொருட்களை சேகரம் செய்யும் தொட்டிக்கு (Collection) கொண்டு சேர்த்தல் ஆகிய துப்புரவு பணிக்கு சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 22.11.2018 ஆம் தேதிய ந.க.28369/ஜே3/2018 எண்ணிட்ட கடிதத்தில் 49 தனியார் துப்புரவு பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நிர்ணயித்த தினக்கூலி பட்டியலின்படி வழங்க உத்திரவு பிறப்பித்ததை தொடர்ந்து மேற்கண்ட 49 தனியார் துப்புரவுப் பணியாளர்களை கொண்டு துப்புரவு பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரியதில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்த M/s Roylon Facilitty Service Privatr Ltd, Chennai என்ற நிறுவனத்திற்கு ஒப்பந்த நிபந்தனைகளுக்குட்பட்டு பணி உத்திரவு வழங்கப்பட்டு ஓராண்டு நிறைவு பெறும் நிலையில் மேற்கண்ட நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை உத்திரவில் மேற்கண்ட பணியினை மூன்றாண்டு காலம் மேற்படி நிறுவனத்தின் செயல்பாடுகள் திருப்திகரமாக இருப்பின் நகர்மன்றத்தின் அனுமதி பெற்று தொடரலாம் என அறிவுறுத்தியதை தொடர்ந்து வருகின்ற 29.02.2020 முதல் 28.02.2020 வரை ஓராண்டு காலத்திற்கு மேற்கண்ட நிறுவனத்திற்கு கால நீட்டிப்பு செய்யலாம் என நகராட்சி சுகாதார ஆய்வாளர் அவர்களின் அறிக்கையின்படியும், மேலும் M/s Roylon Facility Service Private Ltd, Chennai என்ற நிறுவனத்தின் ஒப்புதல் கடிதத்தில் 2019–2020ம் ஆண்டு வழங்கப்பட்ட பணி உத்திரவில் தெரிவிக்கப்பட்ட நிபந்தனைக்குட்பட்டு மேற்கண்ட பணியினை நீட்டிப்பு செய்து வழங்குமாறு தெரிவித்ததை தொடர்ந்து மேற்கண்ட பணியினை ஓராண்டு காலம் நீட்டிப்பு செய்ய மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **1.மன்றம் அனுமதிக்கலாம்.**

**2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள தீர்மானிக்கலாம்.**

**3. M/s Roylon Facility Service Pvt Ltd, சென்னை என்ற நிறுவனத்திற்கு 2019ஆம் ஆண்டு வழங்கப்பட்ட பணி உத்திரவில் தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகளுக்குட்பட்டு ஓராண்டு கால பணி நீட்டிப்பு செய்வதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.4998/2018/எச்1).**

**தீர்மான எண், நாள்** **825, நாள்.28.02.2020**

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

**பொருள் எண்.10**

சின்னமனூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள நகராட்சி மற்றும் அரசு பள்ளிகளில் சுகாதாரத்தை பாதுகாக்கும் வகையில் கழிவறைகளை நல்ல முறையில் பராமரிக்கும் பொருட்டு ஒப்பந்த அடிப்படையில் தனியார் துப்புரவு பணியாளர்களை கொண்டு மேற்கொள்ள அரசாணை (நிலை) எண்.77, பள்ளிக்கல்வி(பக4(1)த்துறை), நாள். 13.04.2015 மற்றும் சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 26.10.2017ம் நாளிட்ட ந.க.எண்.32050/2016–1/ஜே2 எண் கடிதத்தில் அறிவுறுத்தியதை தொடர்ந்து 12 தற்காலிக துப்புரவு பணியாளர்களைக் கொண்டு பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு 01.03.2019 முதல் 28.02.2020 உடன் முடிவடைவதால் மேற்கண்ட பள்ளிகளில் மாணவர்களின் நலன் பாதுகாக்கும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே பள்ளி மாணவர்களின் நலனை கருத்தில் கொண்டு மாவட்ட ஆட்சித் தலைவர், தேனி அவர்களால் நிர்ணயம் செய்த ஊதியத்தில் தற்காலிக ஒப்பந்த துப்புரவு பணியாளர்களை பணியமர்த்துவதற்கு ஏற்கனவே மேற்கண்ட பணியினை மேற்கொள்ளும் திரு.ஆர்.பரமானந்தன் என்பவரின் ஒப்புதல் கடிதத்தினை ஏற்றும் மேலும் சுகாதார ஆய்வாளர் அவரின் குறிப்பில் மேற்கண்ட பணிக்கு புதிய ஒப்பந்தப்புள்ளி கோரி பணி உத்திரவு வழங்க அதிக காலமும் மற்றும் அதிக செலவினமும் ஆகும் என்பதாலும் உள்ளாட்சி தேர்தல் சம்மந்தமாக தேர்தல் பணிகள் வேகமாக நடைபெற்றுக் கொண்டிருப்பதாலும், காலதாமதத்தை தவிர்க்கும் வகையில் அவசர அவசியம் மற்றும் பள்ளி மாணவர்களின் நலனை கருத்தில் கொண்டு 2019–2020 ஆம் ஆண்டிற்கு வழங்கிய அதே விலை விகிதத்தில் 10 பள்ளிகளில் உள்ள கழிவறைகளை சுத்தம் செய்யும் பணியினை நீட்டிப்பு செய்து ஒப்பந்ததாரர் திரு.ஆர்.பரமானந்தன் என்பவருக்கே 01.03.2020 முதல் அன்னாரின் சம்மதக் கடிதத்தின்படி பணி நீட்டிப்பு செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலகக் குறிப்பு:– | **1.மேற்படி செலவினத்தை வசூல் செய்யப்படும் 2019–2020 ஆம் ஆண்டிற்கான கல்வி நிதியில் ஆண்டு பராமரிப்பு செலவினம் போக எஞ்சிய தொகையிலும் அல்லது தூய்மை இந்தியா திட்ட நிதியிலும் மேற்படி தூய்மை இந்தியா திட்ட நிதி பற்றாக்குறை ஏற்படின் வருவாய் நிதியிலும் மேற்கொள்ளலாம்.**<br>**2. அவசர அவசியம் கருதி மற்றும் பள்ளி மாணவர்களின் நலனை கருத்தில் கொண்டு துப்புரவு ஆய்வாளரின் அறிக்கையின் அடிப்படையில் 01.03.2020 முதல் மேலும் ஓராண்டிற்கு பள்ளிகளில் உள்ள கழிவறைகளை பராமரிப்பு பணியினை நீட்டிப்பு செய்வதற்கு மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.5489/2015/எச்1)** |
| **தீர்மான எண், நாள்** | **826, நாள்.28.02.2020** |
| **தீர்மானம்** | **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |

*******

**பொருள் எண்.11**

அரசாணை (நிலை) எண்.36, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நப3) துறை, நாள்.05.04.2018ஆம் தேதிய அரசாணையின்படி நகராட்சி மற்றும் மாநகராட்சிகளில் பணிபுரிந்து வரும் நகர சுகாதார செவிலியர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் சீருடைப்படி ரூ.500/—ஐ ஆண்டொன்றுக்கு ரூ.1000/—ஆக உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது.

அரசாணையின்படி, இந்நகராட்சியில் பணிபுரியும் நகர சுகாதார செவிலியர்களுக்கு சீருடைப்படியினை உயர்த்தி வழங்கும் பொருட்டு மேற்படி அரசாணை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:—** | **மன்றம் பதிவு செய்யலாம். (ந.க.எண்.0741/2020/சி1)** |
| **தீர்மான எண், நாள்** | **827, நாள்.28.02.2020** |
| **தீர்மானம்** | **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |

*******

**பொருள் எண்.12**

இந்நகராட்சிக்குச் சொந்தமான சங்கிலியார் திடலில் உள்ள தரைக்கடை எண்.1 திரு.த.பாண்டி என்பவர் பெயரில் உள்ளது. திரு.த.பாண்டி உடல் நலம் குறைவின் காரணமாக தொடர்ந்து கடையினை நடத்த முடியாத காரணத்தினால் அவரது பங்குதாரர் திரு.S.ராஜேஸ் பெயருக்கு பெயர் மாற்றம் செய்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:—** | **மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.4858/2019/அ2)** |
| **தீர்மான எண், நாள்** | **828, நாள்.28.02.2020** |
| **தீர்மானம்** | **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |

*******

**பொருள் எண்.13**

சின்னமனூர் நகராட்சிக்குச் சொந்தமான பேருந்து நிலையம், அம்மா உணவகம் மற்றும் நகராட்சி கட்டிடம் ஆகிய இடங்களில் மழைநீர் சேகரிப்பு தொட்டி அமைக்கும் பணிக்கு மதிப்பீடு ரூ.9.00 இலட்சத்திற்கு 24.02.2020 ஆம் தேதியன்று வரப்பெற்ற மறு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. திரு.கே.வனராஜ், ஒப்பந்ததாரர் — 0.10% சதவீதம் மதிப்பீட்டைவிட குறைவு

2. திரு.ஆர்.பரமானந்தன், ஒப்பந்ததாரர் — 0.25% சதவீதம் மதிப்பீட்டைவிட அதிகம்.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:—** | **குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள (0.10%) திரு.கே.வனராஜ் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.2712/2019/இ1)** |
| **தீர்மான எண், நாள்** | **829, நாள்.28.02.2020** |
| **தீர்மானம்** | **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |

*******

**பொருள் எண்.14**

இந்நகராட்சி அலுவலகத்தில் உள்ள சுகாதார அலுவலர், சுகாதார ஆய்வாளர் கணினி அறை, வருவாய் பிரிவு அறை, நகராசி பொறியாளர் அறை மற்றும் பொது பிரிவு ஆகிய இடங்களில் உள்ள குளிரீட்டும் சாதனம் பெட்டியில் சிறு சிறு பழுதுகள் மேற்கொள்ள தொகை ரூ.10750/—க்கு இந்நகர்மன்ற தீர்மான எண்.642, நாள்.28.06.2019—இல் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன்படி குளிரீட்டும் சாதன பெட்டியில் சிறு சிறு பழுதுகள் மேற்கொள்ள 22.07.2019 ஆம் அன்று வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் , முடிவிற்கும் வைக்கப்படுகிறது

| | | |
|---|---|---|
| 1 | M/s MS Cool Technical Service | தொகை ரூ.10750/— |
| 2 | M/s Everest Cool Tech Air Conditioner | தொகை ரூ.14100/— |
| 3 | M/s Cool Tech Air Conditioner | தொகை ரூ.12450/— |

**அலுவலகக் குறிப்பு:—** **குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள வரிசை எண்.1—இல் உள்ள நிறுவனத்தின் விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.2240/2019/இ1)**

**தீர்மான எண், நாள்** **830, நாள்.28.02.2020**

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******